2022 ஜனவரி 6]

அந்தத் திட்டம், அம்மா ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டம் இன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனைப் போன்று மதுரையின் தென் பகுதியில் இருக்கின்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியில், ஒரே ஒரு வார்த்தையில், என்ன வேண்டுமென்று விஷயத்தைச் சொல்லுங்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், விரிவுபடுத்தப்பட்ட அந்த நகராட்சிப் பகுதியின் 13 வட்டங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை விரைவுபடுத்தி, மதுரை மாநகராட்சி மக்களுக்காக செயல்படுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு வழங்கியிருக்கின்ற உத்தரவு என்பது ஒவ்வொரு பெருநகரத்திலும் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகள், ஏற்கெனவே தொடங்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்ற பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மட்டுமல்ல, மழை நீர் வடிகால்கள் மற்றும் குடிநீர் வசதி அனைத்தையுமே நிறைவு செய்து தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்தளவு 13 வட்டங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே,* AMRUT *திட்டத்தில் ஏற்கெனவே தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதை நீட்டித்து, மீண்டும் அதற்கென்று தனியாக ஒரு திட்டம் தயாரித்து, அந்தப் பகுதிகளும் இணைக்கப்பட்டு, பாதாள சாக்கடைத் திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி

***467—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2022 ஜனவரி 6

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், வெறையூரில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, வெறையூரில் மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய கிளையைத் துவங்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். வெறையூரைச் சுற்றி ஏறத்தாழ 38 கிராமங்களுக்கு மேல் சிறு கிராமங்களாக இருக்கின்றன. வங்கி வசதி அவசியமாக அங்கே தேவைப்படுகிறது. NEFT, RTGS, SMS alert *மற்றும்* ATM *போன்ற மின்னணு வசதிகளை அப்பகுதியில் இருக்கக்கூடிய கிராம மக்களுக்கென ஏற்படுத்த வேண்டுமென்று எங்கள் துறை விரும்புவதால் வெறையூரில் மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய கிளை துவங்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பிறந்த நாள் காணும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும், உங்களின் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

திருவண்ணாமலை மாவட்டத்தில், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே வெறையூர் கிராமத்தைச் சுற்றி ஏராளமான மக்கள் வசித்து வருகிறார்கள். அங்கேயிருக்கின்ற மகளிரெல்லாம் மகளிர் சுய உதவிக் குழுக்களின்மூலம் பெற்ற கடன்களைத் திருப்பிக் கட்டுவதற்கு திருவண்ணாமலைக்கு bus *ஏறி செல்லக்கூடிய ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மகளிர் சுய உதவிக் குழுவினர் வெறையூரிலே மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய கிளை அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 'அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. ஆனால், அந்தக் கோரிக்கை இந்த ஆண்டே நிறைவேற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.*

2022 ஜனவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, வேட்டவலம் மற்றும் சுற்றியிருக்கின்ற பல பகுதிகளில் வங்கி வசதிகள் நிறைய இருக்கின்றன. ஆனால், வெறையூரைப் பொறுத்தளவில், ஏறத்தாழ 12, 20 கிலோ மீட்டர் தூரத்தில்தான் வங்கிகள் அதிகமாக இருக்கின்றன. அதிலும் அங்கு வணிக வங்கிகள் இல்லை. வெறையூரில் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியாதான் இருக்கிறது. எனவே, அவசியமாக மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலமாக அங்கே கிளை அமைத்தால் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களினுடைய முதல் கேள்விக்குப் பரிசாக இந்த வங்கியினுடைய கிளை துவக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வங்கியை அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறதா? அதிலும் குறிப்பாக* RTGS, ATM *மற்றும்* SMS alert *போன்ற பல்வேறு நவீன வசதிகளையெல்லாம்* State Bank of India, Indian Bank *போன்ற வங்கிகள் தந்து கொண்டிருக்கின்றன. அதேபோல கூட்டுறவு வங்கி அமைக்கப்படும்போது கணினிமயமாக்கப்பட்டு, இந்த வசதிகளையெல்லாம் வழங்கக்கூடிய வகையிலே, புதிதாக அமைக்கப்படுகின்ற கிளை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அங்கே வங்கியினுடைய கிளையை துவங்குவதற்கு இந்த வசதிகளையெல்லாம் செய்து தருகின்ற அளவிற்கு வாடகைக் கட்டடம் பார்க்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் இப்பொழுது நம்முடைய துறையினுடைய மாவட்ட வங்கி மேலாளர் மூலமாக நடைபெற்று வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***3092—திரு. எம்.சி. சண்முகையா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–25

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போது 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 9 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 14 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர, 12 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 10 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதியில் உள்ள மாணவ, மாணவியரின் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்து வருவதால், ஒட்டப்பிடாரத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் பாதுகாவலரும், தமிழ் மொழியின் பாதுகாவலரும், கழகத்தின் தலைவருமான மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன்.*